வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்- சரவணகுமார்

தேதி 14.12.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

நடப்பு 2025 ஆம் ஆண்டிற்கான தேசிய எரிசக்தி தின விருதுகளை குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு இன்று புதுடெல்லியில் வழங்கினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை முதல் 2 நாள் அரசு முறை பயணமாக ஜோர்டான் நாட்டுக்கு செல்ல உள்ளார்.

வடகிழக்கு பிராந்தியம் தற்போது இந்தியாவின் புதிய நம்பிக்கையின் முகமாக திகழ்கிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் வாக்காளர் சிறப்பு சீர்திருத்த பணிகள் இன்றுடன் நிறைவடைகின்றன.

முர்மு (15)

நடப்பு 2025 ஆம் ஆண்டிற்கான தேசிய எரிசக்தி தின விருதுகளை குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு இன்று புதுடெல்லியில் வழங்கினார். தேசிய எரிசக்தி தினத்தை முன்னிட்டு இந்த விருதுகளை அவர் வழங்கி கவுரவித்தார். நிகழ்ச்சியில் மத்திய எரிசக்தி துறை அமைச்சர் திரு மனோகர்லால் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். 7 பிரிவுகளில் 28 பேர்களுக்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் உரையாற்றிய

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, எரிசக்தி சேமிப்பின் அவசியத்தை வலியுறுத்தினார். எரிசக்தி சேமிப்பு குறித்து மக்களிடையே போதிய விழிப்புணர்வை அதிகரிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். ஒவ்வொரு இந்தியரும் வருங்கால எரிசக்தியை காக்க முன் வர வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். எரிசக்தி, எரிசக்தி சேமிப்பு, தூய்மையான எரிசக்தி, மாற்றம் ஆகியவற்றில் இந்தியா பல்வேறு குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார். இத்துறையில் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு முன்பாகவே, தூய்மையான எரிசக்தி தொகுப்பை இந்தியா நிறைவேற்றி உள்ளது என்றும் திருமதி முர்மு தெரிவித்தார்.

குடியரசு துணைத் தலைவர் (15)

தற்போதைய டெல்டா மாவட்ட பகுதியை ஆண்ட பேரரசர் இரண்டாம் பெரும் பிடுகு சொர்ணமாலா முத்திரையர் சிறப்பு அஞ்சல் தலையை குடியரசு துணைத் தலைவர் திரு சி பி இராதாகிருஷ்ணன் இன்று புதுடெல்லியில் வெளியிட்டார். எத்தனை ஆட்சியாளர்கள் இருந்தாலும், சிலர் மட்டுமே பேரரசர் என்ற தகுதி பெற்றிருந்தனர் என்றும், அவர்களில் பெரும் பிடுகு சொர்ணமாலா முத்திரையர் தனிச்சிறப்பு மிக்கவர் என்றும் கூறினார். 16 சிறப்பு மிக்க போர்களில் பங்கேற்றும், ஒன்றில் கூட தோல்வியே தழுவாத மன்னர் பெரும் பிடுகு சொர்ணமாலா முத்திரையர் என்றும் அவர் குறிப்பிட்டார். அத்தகைய மன்னரின் சிறப்பு தபால் தலையை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைவதாக கூறினார். இந்நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர்கள் திருமதி நிர்மலா சீதாராமன், டாக்டர் எல் முருகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். மத்திய ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் பேசுகையில், பிரதமர் திரு நரேந்திர மோடியின் மூலம் அறியப்படாத தலைவர்களின் தகவல்களை கண்டறியும்

நோக்கில் இத்தகைய தலைவர்களுக்கு பாராட்டு விழா நடத்தப்படுவது அவசியம் என்றார்.

*மோடி பயணம்* 1 (7)

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை முதல் 2 நாள் அரசு முறை பயணமாக ஜோர்டான் நாட்டுக்கு செல்ல உள்ளார். ஜோர்டானின் மன்னர் இரண்டாம் அப்துல்லா பின் அல்லாஹ் உசைனின் அழைப்பின் பேரில், வரும் செவ்வாய் கிழமை வரை அவர் இந்த பயணம் மேற்கொள்கிறார். இரு நாடுகளுக்கு இடையிலான உறவுகள் ஏற்படுத்தப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவடைவதை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி முதல் முறையாக இந்த பயணம் மேற்கொள்கிறார். இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு……

**(வாய்ஸ்)**

*மோடி பயணம்* 2 (16)

**(வாய்ஸ்)**

இந்தியாவும், ஜோர்டானும் வலுவான மற்றும் சீரான விரிவடையும் பொருளாதார வளர்ச்சியை கொண்டுள்ளன. இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகம் சுமார் 2.8 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புடையதாக கருதப்படுகிறது. ஜோர்டான் இந்தியாவிற்கு உரங்களை, குறிப்பாக பாஸ்பேட் மற்றும் பொட்டாசியம் ஆகியவற்றை வழங்கும் நாடாக உள்ளது. இவை விவசாய துறைக்கு மிகவும் முக்கியமானவையாகும். இந்தியாவின் இப்கோ உர நிறுவனம் இதற்கு ஒரு முக்கிய சான்றாகும். இந்த உர நிறுவனம் இந்தியாவிற்கு பாஸ்போலிக் அமிலத்தை உற்பத்தி செய்து, ஏற்றுமதி செய்வதற்காக நிறுவப்பட்டதாகும். இது இந்தியாவின் உணவு பாதுகாப்பு கட்டமைப்பை வலுப்படுத்துகிறது.

மேலும், இந்தியாவின் ஆடை நிறுவனங்களுக்கு புத்துயிர் அளிக்கிறது. ராயல் ஜோர்டானின் நிறுவனம்- அம்மான்- மும்பை இடையே நேரடி விமானப் போக்குவரத்தை தொடங்குவதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையே நட்பு மேம்பட்டுள்ளது. ஜோர்டான்-இந்தியா விமானப் பயணிகளுக்கு விசா ஆன் அரைவல், மின்னனு விசா ஆகியவற்றை வழங்குகிறது. இது சுற்றுலாவை மேலும் எளிதாக்க உதவுகிறது.

*பிரதமர் நாகாலாந்து*(8)

வடகிழக்கு பிராந்தியம் தற்போது இந்தியாவின் புதிய நம்பிக்கையின் முகமாக திகழ்கிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார். நாகாலாந்தில் நடைபெறும் கலாச்சார விழா குறித்து மத்திய அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா எழுதியுள்ள கட்டுரைக்கு பதில் அளித்து பேசிய அவர், இந்த திருவிழாவை கொண்டாடுவதுடன், நாகாலாந்து திருவிழாக்களின் மணி என்று இதன் பெருமையை போற்றியுள்ளார். மேலும், வடகிழக்கு பிராந்தியம் ஒளிரும்போதுதான் நமது நாடு ஒளிரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எஸ்.ஐ.ஆர் (15)

12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் வாக்காளர் சிறப்பு சீர்திருத்த பணிகள் இன்றுடன் நிறைவடைகின்றன. தேர்தல் ஆணையம் ஏற்கனவே 11 ஆம் தேதியுடன் இந்த பணிகள் நிறைவடையும் என்று அறிவித்திருந்த நிலையில், மேலும் 3 நாட்களுக்கு அவகாசத்தை நீட்டித்திருந்தது. அதன்படி கணக்கெடுப்பு படிவங்களை வாக்காளர்கள் தாக்கல் செய்வதற்கு இன்று கடைசி தினமாகும். தமிழகத்தை பொருத்தவரை 99 சதவிகிதத்திற்கும் அதிகமான பணிகள் நிறைவடைந்துள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. பதிவேற்றம் செய்யும் பணிகள் நிறைவடைந்து வரும் 19 ஆம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்ட பின்னர் அதன் திருத்தங்களை மேற்கொள்வது, புதிய வாக்காளர்களை சேர்த்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும், அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

அஸ்வினி வைஷ்ணவ் (8)

வந்தே பாரத் ரயில்களில் உள்ளூர் உணவுகளை வழங்க அரசு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய ரயில்வே துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் உள்ள ரயில்வே தலைமையகத்தில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வந்தே பாரத் ரயில்களில் உள்ளூர் உணவுகளை வழங்க ரயில்வே மண்டல அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும், அதனை படிப்படியாக

அனைத்து ரயில் நிலையங்களிலும் அறிமுகப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

தேசிய எரிசக்தி தினம் 1 (4)

நாடு முழுவதும் தேசிய எரிசக்தி பாதுகாப்பு தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இத்தினத்தை ஒட்டி பல்வேறு துறைகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு குடியரசு தலைவர் இன்று புதுடெல்லியில் விருதுகளை வழங்கி கௌரவித்தார். இத்தினம் குறித்த ஒருசெய்தித் தொகுப்பு……….

**வாய்ஸ்**

தேசிய எரிசக்தி தினம் 2 (12)

**வாய்ஸ்**

பொதுமக்கள் மின்சாரம், பெட்ரோல், சமையல் எரிவாயு உள்ளிட்ட எரிசக்திகளை தேவைக்கு ஏற்ப உபயோகிப்பதும், அதன் பாதுகாப்பு குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்த தினம் நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. இத்தினம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது. அதன்படி, பள்ளி கல்லூரிகள், அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள், பொது இடங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது. நம்முடைய தினசரி உபயோகத்தில் எரிசக்தி என்பது மிக முக்கியமான ஒன்றாகும். மின்சாரம், பெட்ரோல், சமையல் எரிவாயு இல்லாமல் மனிதனால் எதுவும் செய்ய முடியாது என்ற நிலை உருவாகி

உள்ளது. அதிக மக்கள் தொகை காரணமாக எரிசக்தி அதிக அளவில் தேவைப்படுகிறது.

*அமித் ஷா* (10)

நக்சல் தீவிரவாதத்தால் யாருக்கும் பயன் கிடையாது என்றும், அமைதி மட்டுமே வாழ்க்கைக்கு வழி வகுக்கும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார். சத்தீஸ்கர் மாநிலத்தில் நடந்த விளையாட்டு போட்டி நிறைவு விழா நிகழ்ச்சியில் பேசிய அவர், நக்சல் தீவிரவாதம் முழுமையாக ஒழிக்கப்பட்ட பிறகு தான் புதிய சகாப்தம் தொடங்கும் என கூறினார். மேலும், வரும் 2026 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதிக்குள் நாட்டில் இருந்து நக்சல் தீவிரவாதத்தை ஒழிக்க மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். விரைவில், நக்சல் தீவிரவாதத்துடன் தொடர்பில் ஈடுபட்டவர்கள் ஆயுதங்களை கைவிட்டு, சமூகத்தில் இணைய வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

*நட்டா* (6)

நாடு முழுவதும் கட்டப்பட்டு வரும் பிஜேபி அலுவலகங்கள் வெறும் கட்டிடங்கள் அல்ல. மாறாக மதிப்புகள் மற்றும் கொள்கைகளின் மையங்கள் என பிஜேபி தலைவர் திரு ஜே பி நட்டா தெரிவித்துள்ளார். இவை மக்களின் சேவைக்காகவும், நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் செயல்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். இமாச்சல பிரதேசத்தின் பிஜேபி அலுவலக திறப்பு விழாவின் செய்தியாளர்கள் கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

*துணை நிலை ஆளுநர்* (8)

புதுச்சேரியில் கிழக்கு கடற்கரை சாலையில் புதிதாக கட்டடப்பட்டுள்ள லாஸ்பேட்டை காவல் நிலைய கட்டிட திறப்பு விழா இன்று நடைபெற்றது. நிகழ்ச்சியில், புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கே கைலாஷ்நாதன் காவல் நிலைய கட்டிடத்தை திறந்து வைத்தார். நிகழ்ச்சியில், முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப்பேரவை தலைவர் திரு ஆர் செல்வம், மாநில உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம், பொதுப்பணித்துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், காவல் துறை இயக்குநர் திரு ஷாலினி சிங் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

*நிலச்சரிவு* (9)

இந்தோனேஷியா-சுமித்ரா தீவில் கடந்த இரு தினங்களாக நடைபெற்று வரும் இயற்கை பேரிடர் மற்றும் நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தை கடந்துள்ளது. 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். 200 க்கும் மேற்பட்டோரை காணவில்லை என்றும் கூறப்படுகிறது. இந்த இயற்கை பேரிடர் காரணமாக 1 லட்சத்திற்கும் மேற்பட்ட கட்டிடங்கள் மற்றும் வீடுகள் பலத்த சேதடைந்துள்ளன. மீட்பு நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. பலத்த நிலச்சரிவு மற்றும் மோசமான வானிலை காரணமாக இலங்கை, தாய்லாந்து, மலேஷியா, வியட்நாம், ஆகிய நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

கிரிக்கெட் (11)

இந்தியா-தென்னாப்பிரிக்கா அணிகள் மோதும் 3 ஆவது டி 20 தொடர் இன்று தர்மசாலாவில் நடைபெறுகிறது. இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வரும் தென்னாப்பிரிக்க கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டி-20 தொடரில் விளையாடி வருகிறது. இதில், கட்டாக்கில் நடந்த முதலாவது ஆட்டத்தில், இந்தியா 101 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. நியூ சண்டிகரில் நடந்த 2 ஆவது ஆட்டத்தில், தென்னாப்பிரிக்கா 51 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதனையடுத்து, இந்த தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளது. இந்நிலையில், இமாச்சல பிரதேசம் தர்மசாலாவில் இன்று 3 ஆவது போட்டி நடைபெற உள்ளது. இப்போட்டி இந்திய நேரப்படி இந்திய நேரப்படி இரவு 7 மணிக்கு தொடங்க உள்ளது.